**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **- திரு.வை.அரங்கசாமி, பி.எஸ்.சி., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர், வந்தவாசி.**

2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் நாள் திங்கள் கிழமை

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 1564/2025**

**C.N.R. No. TNTM15- 003526-2025**

**அரசுக்காக:-**
காவல் ஆய்வாளர்,
வந்தவாசி வடக்கு காவல் நிலையம்,
குற்ற எண். 135/2024. ... குற்றமுறையிடுபவர்

**- எதிர்-**

**1. கார்த்திகேயன், (வயது சுமார் 40/2025)**
த/பெ. ஆணைகுட்டி,
எண். 332/1, பஜனைகோயில் தெரு,
சளுக்கை கிராமம்,
வந்தவாசி தாலுக்கா.
திருவண்ணாமலை மாவட்டம்.

**2. சுரேஷ், (வயது சுமார் 27/2025)**
த/பெ. முருகன்,
எண். 478, வினாயகர் கோயில் தெரு,
சளுக்கை கிராமம்,
வந்தவாசி தாலுக்கா,
திருவண்ணாமலை மாவட்டம். ... எதிரிகள்

CASE SUMMARY AS PER THE CIRCULAR OF HON'BLE HIGH COURT, MADRAS
IN ROC.No.814/2020/RG/F1, Dated : 07.04.2021

| | | |
|---|---|---|
| 1 | ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். | **C. C. No.1564/2025** |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | **அரசுக்காக:-**<br>காவல் ஆய்வாளர்,<br>வந்தவாசி வடக்கு காவல் நிலையம்,<br>குற்ற எண். 135/2024. |
| 3 | எதிரிகளின் பெயர், வயது, தந்தையின் பெயர் மற்றும் முகவரி | **1. கார்த்திகேயன், (வயது சுமார் 40/2025)**<br>த/பெ. ஆணைகுட்டி,<br>எண். 332/1, பஜனைகோயில் தெரு,<br>சளுக்கை கிராமம், |

| | | |
|---|---|---|
| | | வந்தவாசி தாலுக்கா.<br>திருவண்ணாமலை மாவட்டம்.<br>**2. சுரேஷ், (வயது சுமார் 27/2025)**<br>த/பெ. முருகன்,<br>எண். 478, விநாயகர் கோயில் தெரு,<br>சளுக்கை கிராமம்,<br>வந்தவாசி தாலுக்கா,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 4 | எதிரிகளின் தொழில் | விவசாயம் |
| 5 | குற்ற நிகழ்வு நாள் | 20.08.2024 |
| 6 | புகார் அளிக்கப்பட்ட நாள் | 20.08.2024 |
| 7 | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | 20.08.2024 |
| 8 | எதிரிகள் ஜாமினில் விடுவிக்கப்பட்ட நாள் | 19.12.2025 |
| 9 | விசாரணை தொடங்கப்பட்ட நாள் | 12.11.2025 |
| 10 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | 26.11.2025 |
| 11 | நீதிமன்றத்தின் முடிவு | **(i) எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள தமிழ்நாடு விலக்குச் சட்டப் (திருத்தச் சட்டம்) பிரிவு 4(1)(i) r/w.Sec.4(1)(A)-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்று தீர்மானித் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகள் குற்றவாளி இல்லை என முடிவு செய்து பிரிவு 271(1) BNSS-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**<br><br>**(ii) இவ்வழக்கு சொத்தான C.P.No.286/2025-ல் கண்ட சா.பொ.1. Golden Monitor Brandy 55 மற்றும் அரசு மதுபானம் Mclene Brandy Bottles 60 -மொத்தம் 115 பாட்டில்களில் உள்ள திரவத்தை** |

| | | |
|---|---|---|
| | | **அழிக்கவும், பாட்டில்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அரசுக்கு ஆதாயம் செய்ய உத்தரவிடப்படுகிது. இவ்வழக்கு சொத்தான C.P.No.287/2025-ல் கண்ட சா.பொ. 2 ரூ.850/- மற்றும் சா.பொ. 3. இருசக்கர TN 97 V 9776 Hero Splendor -த்தை பிறகு உரிய நபர் ஒரு மாதத்தில் மனு செய்யும்பட்சத்தில் பரிசீலனைக்கு பிறகு ஒப்படைக்கவும் தவறும்பட்சத்தில் அரசுடைமை செய்யவும் உத்தரவிடப்படுகிறது.**<br><br>**(iii) எதிரிகள் தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணைமுறி இவ்வழக்கின் மேல்முறையிட்டு காலத்திற்கு பிறகு இரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது.** |
| 12 | எதிரிகளுக்கு தீர்ப்பின் நகல்/ முடிவு தெரிவிக்கப்பட்டதா | ஆம் |
| 13 | காலதாமதத்திற்கான காரணம்:- | இறுதியறிக்கை 21.08.2024 அன்று தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 22.10.2025 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 12.11.2025 அன்று இந்த நீதிமன்றத்தால் விசாரணை தொடங்கி, 20.04.2026 அன்று தீர்ப்பு பகரப்பட்டது. அரசு தரப்பில் எதிரிகளுக்கு அழைப்பாணையைசார்வு செய்வதிலும் சாட்சிகளுக்கு அழைப்பாணையை சார்வு செய்து முன்னிலைப்படுத்தி விசாரணை செய்வதிலும் காலதாமதம் |

| | | |
|---|---|---|
| | | ஏற்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்தின் தரப்பில் நியாயமற்ற தாமதம் எதுவும் இல்லை. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 22.10.2025 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 07.04.026ம் தேதி இறுதி விசாரனைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-I திரு.D.கிரகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.A.நஜீரா, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும் ஆவணங்களை ஆராயந்தும் இறுதி பரிசீலனைக்கு பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்....

## தீர்ப்புரை

**இறுதியறிக்கையின் சுருக்கும் :**

கடந்த 20.08.2024 ம் தேதி பகல் 13.00 மணிக்கு சளுக்கை கிராமத்தில் 1ம் எதிரி கார்த்திக்(எ) கார்த்திகேயன் மற்றும் 2ம் எதிரி சுரேஷ் என்பவர்கள் சுமார் ISO ML அளவு கொண்ட Monitor Brandy Bottles -55, Mclene Brandy Bottles -60 மொத்தம் 115 அரசு மதுபாட்டில்களை தங்கள் சுயலாபத்திற்காக கள்ளத்தனமாக மதுபாட்டில்களை மதுபானக்கடையில் வாங்கி வந்து அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றத்திற்காக பிரிவு 4(1)(a) r/w 4(1) (i) TNP Act -ன் கீழ் வந்தவாசி வடக்கு காவல் ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றச்சாட்டு வனைதல்**

இறுதி அறிக்கையின் பரிசீலினையின் பேரில் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிகளுக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்களை BNSS Sec. 230-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பிறகு 1 மற்றும் 2ம் எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவு 4(1)(a) r/w 4(1) (i) TNP Act -ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றம் குறித்து வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்தனர். எனவே, அரசு தரப்பு சாட்சிகள் விசாரனைக்கு உத்திரவிடப்பட்டது.

**3. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம் பின்வருமாறு.**

இவ்வழக்கின் அ.சா.1 திரு. ஜோதி, தனது சாட்சியத்தில், தான் கூலி வேலை

செய்வதாகவும், 20.08.2024ம் தேதி 13.50 மணிக்கு தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அது அ.த.சா.ஆ. 2 ஆகும் என்றும், போலிசார் போடச்சொன்னதால் போட்டேன் என்றும், வேறு விவரம் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3. திரு. ஆறுமுகம், வந்தவாசி வடக்கு காவல் நிலையம், உதவி ஆய்வாளராக பணி செய்வதாகவும், கடந்த 20.08.2024ம் தேதி சரவணன், விக்னேஷ் காவலருடன் மதுபான தடுப்பு சம்பந்தமாக சளுக்கை கிராம ரங்கநாதன் டவுன்சிப் காலிமனை அருகில் ரோந்தில் இருந்தபோது, அங்கு 1ம் எதிரி கார்த்திக், 2ம் எதிரி சுரேஷ் வெள்ளை நிற சாக்குபையில் 180 எம்.எல். அளவு கொண்ட Golden Monitor Brandy 55 பாட்டில்கள், Mclene Brandy Bottles 60 மொத்தம் 115 பாட்டில்களை சாட்சிகள் ஜோதி, சுரேஷ் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ. 5 ஆகவும், 20.08.2024 அன்று 13.50 மணிக்கு 2ம் எதிரி சுரேஷ் என்பவரிடமிருந்து TN 97 V 9776 Hero Splendor என்ற இருசக்கர வாகனம் மற்றும் ரூ.850/- கைப்பற்றுதல் மகசரில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், அது அ.த.சா.ஆ.6 ஆகும் என்றும், கைப்பற்ப்பட்ட பாட்டில்கள் 115 -ஐ சா.பொ. 1, கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனம், சா.பொ. 2, கைப்பற்றப்பட்ட ரூ.850/- சா.பொ.3 ஆகும் என்றும், வழக்கு சொத்துக்களுடன் எதிரியை நிலையம் கொண்டுவந்து நிலைய குற்ற எண். 135/2024 பிரிவு 4(1)(C), 4(1)(A)தமிழ்நாடு மதுவிலக்கு திருத்தச்சட்டம் 2024 ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆகும் என்றும், பின்னர் எதிரிகளையும், வழக்கு சொத்தையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும், வழக்கின் புலன் விசாரணை முடித்து தனக்கு பின்னால் வந்த புலன்விசாரணை அதிகாரி எதிரிகள் மீது பிரிவு 4(1)(C), 4(1)(A) தமிழ்நாடு மதுவிலக்கு திருத்தச்சட்டம் 2024 ன் கீழ்இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இத்துடன் அரசு தரப்பு சாட்சியை முடித்துக்கொள்ளப்பட்டு எதிரிகளுக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சியை சங்கதிகளை தொகுத்து எதிரிகளிடம் கு.வி.மு.ச

பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது எதிரிகள் சாட்சியை பொய் சாட்சி என கூறி மறுத்தார்கள் எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார்.

6. **<u>தீர்வுக்குரிய பிரச்சனை :-</u>**

**இவ்வழக்கில் எதிரிகளுக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.**

7. கடந்த 20.08.2024 ம் தேதி பகல் 13.00 மணிக்கு சளுக்கை கிராமத்தில் 1ம் எதிரி கார்த்திக்(எ) கார்த்திகேயன் மற்றும் 2ம் எதிரி சுரேஷ் என்பவர்கள் சுமார் ISO ML அளவு கொண்ட Monitor Brandy Bottles -55, Mclene Brandy Bottles -60 மொத்தம் 115 அரசு மதுபாட்டில்களை தங்கள் சுயலாபத்திற்காக கள்ளத்தனமாக மதுபாட்டில்களை மதுபானக்கடையில் வாங்கி வந்து அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றத்திற்காக பிரிவு 4(1)(a) r/w 4(1) (i) TNP Act -ன் கீழ் குற்றம் புரிந்ததாக அரசு தரப்பு வழக்காகும்.

8. அரசு தரப்பு கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-1 வாதிடும்போது அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையான சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.3 மட்டுமே காவல்துறை சாட்சி ஆவார். எனவே நீதிமன்றம் தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்கமாறு வாதிட்டார்.

9. எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது இவ்வழக்கில் பொதுமக்களான அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் பிறழ்சாட்சியாக மாறியுள்ள நிலையில், மேலும், எதிரிகளிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் வழக்குச் சொத்துக்களை பரிசோதனைக்காக அனுப்பி தடவியல் துறை அறிக்கை பெறப்படவில்லை. மேலும், சிறப்பு உதவி ஆய்வாளர் BNSS-ன் பிரிவு மற்றும் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்படி புலன் விசாரணை செய்ய அதிகாரம் இல்லை. எனவே, உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் எதிரிகள் மீது பொய்யான நிலைய புள்ளிக்கணக்கிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

10. இவ்வழக்கில் சாட்சிகளின் சாட்சியங்களை பரிசிலனை செய்வதற்கு முன்பு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் 1937 பிரிவு 4(1)(i) பற்றி பார்க்கும்போது,

**Sec.4 Prohibition of the Manufacture of traffic in and consumption of liquor and intoxicating drugs**

(1) Whoever -

(i) Sells Liquor or any intoxicating drug, or to understand the term " liquor" Sec.2(9) of the act provides:-

" Liquor includes toddy, arrack, spirits or wine (denatured spirits)

wine, Spirits, beer and all liquid consisting of or containing alcohol."

**Therefore conviction U/s.4(1)(i); the prosecution must prove: -**

(i) the accused was in possession of liquor bottles.

(ii) Such seized bottles contained alcohol as defined under the Act, and

(iii) The possession was for the purpose of sale, not merely for personal consumption.

என்று கூறப்பட்டுள்ள நிலையில் அ.சா.3.திரு.ஆறுமுகம் (உதவி ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் தான் தற்போது வந்தவாசி வடக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிவதாகவும், கடந்த 20.8.2024ம் தேதி அவருடன் சரவணன், விக்னேஷ் காவலருடன் மதுபான தடுப்பு சம்மந்தமாக சளுக்கை கிராம ரங்கநாதன் டவுன்சிப் காலிமனை அருகில் ரோந்தில் இருந்தபோது அங்கு 1ம் எதிரி கார்த்திக், 2ம் எதிரி சுரேஷ் வெள்ளை நிற சாக்குபையில் 180 எம்.எல் அளவு கொண்ட கோல்டன் மாணிடர் பிராந்தி 55 பாட்டில்கள் மெக்ளின் பிராந்தி பாட்டில்கள் 60 மொத்தம் 115 பாட்டில்களை சாட்சிகள் ஜோதி, சுரேஷ் முன்னிலையில் கைபற்றினேன். அந்த கைபற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.5. என்றும், 20.08.2024ம் தேதி 13.50 மணிக்கு 2ம் எதிரி சுரேஷ் என்பவரிடமிருந்து டி.என்.97 வி 9776 ஈரோ ஸ்பிலெண்டர் என்ற இருசக்கர வாகனம் மற்றும் ரூ.850/- கைபற்றுதல் மகசரில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைபற்றினேன் அது அ.த.சா.ஆ.6 என்றும், கைபற்றப்பட்ட 115 பாட்டில்கள் சா.பொ.1 வரிசை கைபற்றப்பட்ட இருசக்கர வாகனம் சா.பொ.2, கைப்பற்றப்பட்ட ரூ850/- சா.பொ.3 என்றும், வழக்கு சொத்துக்களுடன் எதிரியை நிலையம் கொண்டுவந்து நிலைய குற்ற எண்.135/2024 பிரிவு 4 (1)(C), 4 (1)(A) தமிழ்நாடு மதுவிலக்கு திருத்தச்சட்டம் 2024ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.7 என்றும், பின்பு எதிரிகளையும் வழக்கு சொத்தையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளார் என்றும், வழக்கின் புலன்விசாரணை முடித்து எனக்கு பின்னால் வந்த புலன்விசாரணை அதிகாரி எதிரிமீது பிரிவு 4 (1)(C), 4 (1)(A) தமிழ்நாடு மதுவிலக்கு திருத்தச்சட்டம் 2024ன் கீழ் வழக்கு பதிவு இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

இவ்வழக்கில் அ.சா.3 புலன் விசாரணை அதிகாரியால் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சா.பொ.1 180 ML அளவு கொண்ட 115 மதுபாட்டில்கள் மற்றும் சா.பொ.2 ரூ.850/-பணம், சா.பொ. 3. TN 97 V 9776 Hero Splendor என்ற இருசக்கர வாகனம் கைப்பற்றப்பட்டதாக தெரிய வருகிறது.

ஆனால், மேற்படி எதிரி மதுபாட்டில்களை அனுமதியின்றி விற்பனை செய்துகொண்டிருந்ததாக கூறியுள்ள நிலையில் எதிரியிடமிருந்து வாங்கிய நபர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இந்நீதிமன்றத்தில் சாட்சியாக முன்னிலைப்படுத்தவில்லை.

எனவே,. சா.பொ.1-ல் கண்ட வழக்கு சொத்தினை எதிரிகள் உடைமையில் வைத்திருந்தது மட்டுமே மதுவிலக்கு திருத்தச்சட்டத்தின் கீழ் தண்டிக்க போதுமானதாகாது. மேற்படி மதுபாட்டில்களை விற்பனை செய்ததை தகுந்த தனிநபர் சாட்சிகள் மூலமும், மேலும், விற்பனையின் மூலமும் பெறப்பட்ட பணம் மற்றும் வாங்கிய நபர்களின் சாட்சியத்தின் மூலம் நிரூபிக்க வேண்டியது அவசியமாகும். ஆனால், இவ்வழக்கில் அ.சா.3 புலன்விசாரணை அதிகாரி அதுபோன்று சாட்சிகளை சான்றாவணங்கள் மூலம் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டினை நிரூபிக்கவில்லை.

மேலும், எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சா.பொ. 1. 115 மதுபாட்டில்கள் எதிரிகளிடமிருந்து தான் அ.சா.1 ஜோதி முன்னிலையில், கைப்பற்றப்பட்டது என்று புலன் விசாரணை அதிகாரி சாட்சியமளித்துள்ள போதிலும், அ.சா.1 திரு. ஜோதி, தனது சாட்சியத்தில் அ.த.சாஆ. 2 பார்வை மகசரில் உள்ள 2-வது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், போலிசார் போடச்சொன்னதால் போட்டேன் என்றும், வேறு விவரம் தெரியாது என்று அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

Sec.32(c) of the Tamilnadu prohibition Act, an officer seizing illicit liquor must:-

(i) Draw Samples in the presence of a Prohibition officer or a police officer not below the rank of inspector, and

(ii) Destroy the remaining quantity with certificate specifying the total quantity seized, sample, quantity, and quantity destroyed, which must be towarded to the concerned Jurisdictional judicial Magistrate கூறப்பட்டுள்ள நிலையில்,

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்டும் சா.பொ.1 மது பாட்டில்களிலிருந்து மாதிரிகளை இரசாயன பரிசோதனைக்கு அனுப்பியதாகவோ, மீதமுள்ள மதுவினை அழைத்து சான்றிதழ் தயார் செய்ததாகவோ எந்தவொரு ஆதாரத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

எனவே, எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**முடிவாக,**

**(i) எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள தமிழ்நாடு விலக்குச் சட்டப் (திருத்தச் சட்டம்) பிரிவு 4(1)(i) r/w. Sec.4(1)(A)-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகள் குற்றவாளி இல்லை என முடிவு செய்து பிரிவு 271(1) BNSS-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**(ii) இவ்வழக்கு சொத்தான C.P.No.278/2025-ல் கண்ட சா.பொ.1. Golden Monitor Brandy 55 மற்றும் அரசு மதுபானம் Mclene Brandy Bottles 60 -மொத்தம் 115 பாட்டில்களில் உள்ள திரவத்தை அழிக்கவும், பாட்டில்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அரசுக்கு ஆதாயம் செய்ய உத்தரவிடப்படுகிது. சா.பொ. 2 ரூ.850/- மற்றும் சா.பொ. 3. இருசக்கர TN 97 V 9776 Hero Splendor -த்தை பிறகு உரிய நபர் ஒரு மாதத்தில் மனு செய்யும்பட்சத்தில் பரிசீலனைக்கு பிறகு ஒப்படைக்கவும் தவறும்பட்சத்தில் அரசுடைமை செய்யவும் உத்தரவிடப்படுகிறது.**

**(iii) எதிரிகள் தரப்பில் எழுதிக்கொடுக்கப்பட்ட பிணைமுறி இவ்வழக்கின் மேல்முறையிட்டு காலத்திற்கு பிறகு இரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்பானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பின்னர் இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ARANGASAMY VAIYAPURI

Digitally signed by ARANGASAMY VAIYAPURI
Date: 2026.04.20 18:17:57 +0530

**நீதித்துறை நடுவர்**
**வந்தவாசி.**

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்</u>**

அ.த.சா.1 திரு. ஜோதி - கைப்பற்றுதல் மகசர் சாட்சி
அ.த.சா.2. திரு.சுரேஷ் - கைப்பற்றுதல் மகசர் சாட்சி
அ.த.சா.2. திரு. ஆறுமுகம் ( காவல் உதவி ஆய்வாளர் - வந்தவாசி வடக்கு காவல் நிலையம்)

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்</u>**

அ.த.சா.ஆ.1 20.08.2024ம் தேதி 13.50 மணிக்கு தாயர் செய்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.1ன் முதல் கையொப்பம்
அ.த.சா.ஆ.2. 20.08.2024ம் தேதி 13.40 மணிக்கு தாயர் செய்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.1ன் முதல் கையொப்பம்

அ.த.சா.ஆ.3. 20.08.2024ம் தேதி 13.50 மணிக்கு தாயர் செய்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.2ன் 2வது கையொப்பம்

அ.த.சா.ஆ.4. 20.08.2024ம் தேதி 13.40 மணிக்கு தாயர் செய்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.2ன் 2வது கையொப்பம்

அ.த.சா.ஆ.5. கைப்பற்றுதல் மகசர்

அ.த.சா.ஆ.6. 2ம் எதிரி சுரேஷ் என்பவரிடமிருந்து கைப்பற்றிய இருசக்கர வாகனம் மற்றும் ரூ.850/- ன் கைப்பற்றதல் மகசர்

அ.த.சா.ஆ.7. முதல் தகவல் அறிக்கை

**சான்று பொருள் -**

சா.பொ. 1. Golden Monitor Brandy 55, Mclene Brandy Bottles 60 - 115 Bottles

சா.பொ. 2. ரூ. 850/-

சா.பொ. 3. TN 97 V 9776 Hero Splendor

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் -** இல்லை

ARANGASAMY VAIYAPURI

Digitally signed by ARANGASAMY VAIYAPURI
Date: 2026.04.20 18:18:07 +0530

**நீதித்துறை நடுவர்**
**வந்தவாசி.**

**குறிப்பு.**

1. எந்த சாட்சியும் 3 கேட்பு தினங்களுக்கு மேல் விசாரணை செய்யாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.